மின்னும் மன்னை திட்டத்தை அமல்படுத்தி மன்னார்குடியை மேம்படுத்தும் பணிகளில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதல்களின்படி மன்னார்குடியில் புதிய பேருந்துநிலைய கட்டுமானப் பணிகள் நடைபெற்றுவருகிறது.இதனை தமிழ்நாடு அரசின் தொழில் முதலீட்டு மற்றும் தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பார்வையிட்டார். அப்போது நகர்மன்ற தலைவர் மன்னை த.சோழராஜன், நகர செயலாளர் வீரா கணேசன் ஆகியோர் உடன் இருந்தனர்.

கொரோனா கால

ஒப்பந்த செவிலியர்களின் கண்ணீருக்கு துணைநிலை ஆளுநர் பதிலளிப்பாரா?

புதுவை எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா கேள்வி!

புதுவை, அக்.04-

கொரோனா காலகட்டத்தில் புதுச்சேரி அரசு மருத்துவமனைகளில் ஒப்பந்த அடிப்படையில் 165 செவிலியர்கள் பணியமர்த்தப்பட்டு, தற்போது அவர்களுக்கு 3 மாதங்களுக்கு ஒரு முறை பணி நீட்டிப்பு செய்து வந்தனர். இந்த நிலையில் ஜூலை 4-ஆம் தேதிக்கு பிறகு அவர்களுக்கு பணி நீட்டிப்பு செய்யப்படவில்லை. அதே நேரத்தில் கொரோனா காலத்தில் பணியாற்றிய செவிலியர்களுக்கு பணிநீட்டிப்பு வழங்கப்படும் என்று முதல்வர் அறிவித்தார். இதனிடையே சுகாதாரத் துறையில் 105 செவிலியர்களை நியமிக்க அறிவிப்பு செய்யப்பட்டது. இதனை அறிந்த கொரோனா ஒப்பந்த செவிலியர்கள் தங்களுக்கு பணி நியமனத்தில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தை தொடங்கி உள்ளனர்.

இன்று காலையும் தொடர்ந்த போராட்டத்தில் பங்கேற்ற ஒப்பந்த செவிலியர்களுக்கு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா அவர்கள் தலைமையில் திமுக சட்டமன்ற உறுப்பினர்கள் வி. அனிபால் கென்னடி, எல். சம்பத் ஆகியோர் ஆதரவு தெரிவித்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா பேசியதாவது:-

புதுச்சேரி சுகாதாரத் துறையில் பல ஆண்டுகாலமாக செவிலியர்கள் நிரப்பப்படாமல் இருக்கிறது. கொரோனா காலத்தில் சொற்ப சம்பளத்தில் தங்கள் உயிரையும் பொருட்படுத்தாமல் ஒப்பந்த அடிப்படையில் செவிலியர் பணியாற்றினார்கள். பல உயிர்களை காப்பாற்றினார்கள். இந்த நிலையில் 105 செவிலியர் பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. கடந்த முறை இதுபோன்ற அறிவிப்பு வெளியிட்டபோது நானும் எங்கள் சட்டமன்ற உறுப்பினர்களும் முதல்வரிடம் கடும் எதிர்ப்பு தெரிவித்தோம். அப்போது தலைமைச் செயலர், நிதிச் செயலர், துறைச் செயலர் முன்னிலையில் முதல்வர் அவர்கள் வயது முதிர்ந்த ஒப்பந்த செவிலியர்களுக்கு 10 சதவீத தளர்வும், மார்க்கும் அளித்து அவர்களுக்கு பணி வழங்கப்படும் என்று உறுதியளித்தார்கள். அதில் பலர் பாதிக்கப்பட்டாலும் சிலர் அந்த பணிக்கு தகுதி பெறுகிறார்கள் என்பதை கருத்தில் கொண்டு அன்று ஏற்றுக்கொண்டார்கள். தொடர்ந்து அவர்களுக்கு ரூ. 15 ஆயிரம் சம்பளத்தில் 3 மாதத்திற்கு ஒரு முறை பணி நீட்டிப்பு வழங்கப்பட்டு வந்தது. இந்த நிலையில் ஜூலை முதல் பணி நீட்டிப்பு வழங்காமல் அவர்களை புறக்கணித்துவிட்டு தற்போது 105 செவிலியர் பணியிடங்கள் நிரப்பப்படும் என்ற அறிவிப்பு அவர்களை வாழ்வின் விளிம்பு நிலைக்கு தள்ளி உள்ளது. அவர்கள் கதறி அழுவது புதுச்சேரி மக்களை நெஞ்சுருகச் செய்துள்ளது. அரசாங்கம் ஒப்பந்த செவிலியர்கள் விஷயத்தில் மிகப் பெரிய தவறு இழைத்திருக்கிறது.

எதற்கெடுத்தாலும் குரல் கொடுக்கும் புதுச்சேரி துணைநிலை ஆளுநர் அவர்கள் இந்த செவிலிய பெண்களின் கண்ணீருக்கு பதில் சொல்ல வேண்டும். ஆளுநரிடம் ஒப்பந்த செவிலியர்கள் தொடர்ந்து கோரிக்கை வைத்து வருகின்றனர். பல்வேறு மாநிலங்களில் சாத்தியமாகும் விஷயம் ஏன் புதுச்சேரியில் இல்லை என்பதை ஆளுநர் விளக்க வேண்டும். கதிர்காமம் இந்திராகாந்தி அரசு மருத்துவமனையில் பணியாற்றியவர்கள் ஒரே இரவில் பணி நிரந்தரம் செய்யப்பட்டார்கள். எப்படி என்று கேட்டதற்கு அவர்கள் கொரோனா காலத்தில் உயிரை பணயம் வைத்து பணியாற்றினார்கள் என்றார்கள். அப்படி என்றால் இந்த செவிலியர்கள் என்ன பாவம் செய்தார்கள். முதல்வரின் உறுதிமொழியை ஏற்று தங்கள் வாழ்வாதாரத்தை நம்பியிருந்த இந்த ஒப்பந்த செவிலியர்களுக்கு ஒரு நல்ல பதிலை முதல்வரிடம் கேட்க உள்ளோம். முதல்வரின் பதிலைப் பொறுத்து அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இது ஏதோ இங்கிருக்கும் 165 செவிலியர்களுக்காக நாங்கள் பேசவில்லை. இது ஒட்டுமொத்த புதுச்சேரி மக்களின் ஒருமித்த கருத்தாக பார்க்கிறோம். துணைநிலை ஆளுநர், தலைமைச் செயலர், நிதிச் செயலர் ஆகியோர் இவர்களை பணி நிரந்தரம் செய்ய தடையாக இருக்கிறார்கள் என்றால் அவர்களை எதிர்த்து திமுக போராட்டத்தில் இறங்கும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறோம். புதிய செவிலியர்கள் எடுப்பதில் தவறில்லை. அதே நேரத்தில் தற்போது பணியாற்றும் செவிலியர்களுக்கும் பணி வழங்க வேண்டும். ஏற்கனவே 300 செவிலியர் பணியிடங்கள் காலியாக உள்ளதை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும். ஒரே நேரத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு 30 ஆயிரத்திற்கும் மேல் சம்பளம் கொடுக்கும் இந்த அரசால் கொரோனா காலத்தில் பணியாற்றிய இந்த 165 செவிலியர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியாதா என்பதை அரசு உணர வேண்டும். முதல்வரை மீறி யார் செயல்படுகிறார்கள். அப்படி என்றால் புதுச்சேரியின் சக்தி யார்?. இது நல்ல மனசு இல்லாததுதான் காரணம். இதை நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம். ஒப்பந்த செவிலியர்களின் இந்த நியாயமான போராட்டத்திற்கு தி.மு.க. உறுதுணையாக இருக்கும். இந்த விஷயத்தில் முதல்வர் நல்ல பதில் அளிப்பார் என்று நம்புகிறோம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அப்போது, தி.மு.க. பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ். கோபால், தொகுதி செயலாளர்கள் இரா. சக்திவேல், செ. நடராஜன், வர்த்தகர் அணி துணை அமைப்பாளர் குரு (எ) சண்முக சுந்தரம், இலக்கிய அணி துணை அமைப்பாளர் தர்மராஜன், இளைஞர் அணி துணை அமைப்பாளர் ரெமி எட்வின் ஆகியோர் உடனிருந்தனர்.

நாமக்கல் கிழக்கு மாவட்ட

தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் மூவர் கூடைப்பந்து போட்டி

கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி பரிசு வழங்கினார்

நாமக்கல் அக். 04-

நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் நடைபெற்ற மூவர் கூடைப்பந்து போட்டியில், வெற்றி பெற்ற வீரர்களுக்கு, நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கோப்பையை வழங்கினார்.

நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக விளையாட்டு மேம்பாட்டு அணி மற்றும் நாமக்கல் மாவட்ட கூடைப்பந்து சங்கம் சார்பில், புதிய முறையிலான மூவர் கூடைப்பந்து போட்டிகள், நாமக்கல் தெற்கு அரசு மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் 2 நாட்கள் நடைபெற்றது. புதிய முறையில் ஒரு அணிக்கு மூவர் மட்டுமே கலந்து கொள்ளும் வகையில், அரை மைதானத்தில் இந்த போட்டிகள் நடைபெற்றன. ஒரு போட்டிக்கு 10 நிமிடங்கள் மட்டுமே ஒதுக்கப்பட்டது. நாமக்கல், சேலம், ஈரோடு, கரூர் ஆகிய 4 மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 700 மாணவ-மாணவிகள் மற்றும் கூடைப்பந்து வீரர்கள் வீராங்கணைகள் போட்டியில் கலந்து கொண்டுவிளையாடினர். போட்டிகளை நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம் துவக்கி வைத்தார்.

நிறைவு விழாவிற்கு மாவட்ட கூடைப்பந்து சங்க தலைவர் நடராஜன், பொருளாளர் ஜெகதீசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்வில் நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தலைமை வகித்து, வெற்றி பெற்ற அணிகளுக்கு கோப்பைகளையும், சான்றிதழ்களையும் வழங்கினார். சிறந்த வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு சிறப்பு பரிசுகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட கழக அவைத்தலைவர் சி.மணிமாறன், நகர கழக செயலாளர் ராணா ஆனந்த், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சி.விஸ்வநாத், நகர்மன்றத் தலைவர் து.கலாநிதி, துணைத் தலைவர் செ.பூபதி, மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் டாக்டர் தீபக், மாவட்ட விளையாட்டு அணி துணை அமைப்பாளர் அமைப்பாளர்கள் பிரபு, சுரேஷ்குமார், ஜெயசீலன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மாவட்ட கழக விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் முரளி, கூடைப்பந்து சங்க நிர்வாகிகள் ஜெகதீசன், ஜீவா, சிவக்குமார் ஆகியோர் போட்டிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

நாகையில் நடைபெற்ற மிலாது நபி திருநாளை முன்னிட்டு நாகூர் தர்கா சாஹிப் ஜாதா பவுண்டேஷன் சார்பில் தி.மு.க. கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாநில துணைச் செயலாளர் திருச்சி செ.எழில்மாறன் செல்வேந்திரனுக்கு சமூக ஆர்வலருக்கான சீர்மிகு சேவை செம்மல் விருது வழங்கப்பட்டது.

அரியலூர் மாவட்டம், செந்துறை வட்டாரம், செந்துறையில் கூட்டுறவுத் துறையின் சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடைபெற்ற கடன் வழங்கும் மேளா நிகழ்ச்சியில் கூட்டுறவு வங்கி சார்பாக சிறுசேமிப்பு திட்டத்தின் கீழ் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு உண்டியல் மற்றும் கணக்குப் புத்தகங்களை போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா உள்ளார்.

சு.கல்யாணசுந்தரம் எம்.பி. வரவேற்பில்

கும்பகோணம் பரஸ்பர ஸகாய நிதி லிமிடெட் ஆண்டுக் கூட்டம்!

செ.இராமலிங்கம் எம்.பி., - க.அன்பழகன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

தஞ்சாவூர் அக்.04-

கும்பகோணத்தில் உள்ள பழமையான கும்பகோணம் பரஸ்பர ஸகாய நிதி லிமிடெட் நிறுவனத்தின் 119 வது பேரவைக்கூட்டம், 120 ஆம் ஆண்டு தொடக்க விழா நடைபெற்றது.

119வது பேரவைக் கூட்டம் 29.09.2023 அன்று கும்பகோணம் காந்தியடிகள் சாலை, ராயா மஹாலில் நடைபெற்றது. கூட்டத்தில் நிதியின் துணைத் தலைவர் செ.இராமலிங்கம் எம்.பி, இயக்குனர்கள் சாக்கோட்டை க.அன்பழகன், பி.பிரகாசம், எஸ்.ஹரிஹரன், ஜி.துரைராஜ், இ.அம்பிகா, எம்.குரு பிரசாத் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்திற்கு வந்திருந்தோரை நிதியின் தலைவரும், தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் மற்றும் ராஜ்யசபா உறுப்பினருமான சு.கல்யாணசுந்தரம் வரவேற்று, நிதியின் செயல்பாடுகள் மற்றும் வணிக வளர்ச்சி குறித்து பேசினார்கள்.

அவர் நிதி நிறுவனத்தின் வரலாற்றில் இல்லாத அளவில் தமிழகமெங்கும் 119 கிளைகளுடன் செயல்பட்டு வரும் முன்னோடி நிறுவனம் (Pioneer in Industry) தமது கும்பகோணம் பரஸ்பர ஸகாய நிதி லிமிடெட் இந்திய அளவில் நிதி நிறுவனங்களின் வரிசையில் NDH4 அந்தஸ்து பெற்ற முதல் நிறுவனம்.

கடந்த ஆண்டுகளை போலவே 2022-23 ஆம் ஆண்டிலும் தங்கத்தின் விலையில் ஏற்றத்தாழ்வுகள் இருந்து வந்துள்ளது. இது பல நிதி நிறுவனங்களுக்கு பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தினாலும், நமது நிதியை எந்த விதத்திலும் பாதிக்காத வகையில் இயக்குநர் அவை அவ்வப்போது சிறந்த கொள்கை முடிவுகளை வகுத்து அதன்படி செயல்பட்டதன் காரணமாக நமது நிதி நிறுவனம் நகைக்கடன் வணிகத்தில் மிக பாதுகாப்பான நிலையை எட்டியுள்ளது.

கடந்த 31.03.2022 தேதியன்று ரூ.3,120 கோடியாக இருந்த வைப்பு நிதியானது ரூ.380 கோடி உயர்ந்து கடந்த 31.03.2023 தேதியன்று ரூ.3,500 கோடியாக அதிகரித்துள்ளது.

கடந்த 31.03.2022 தேதியன்று ரூ.2,860 கோடியாக இருந்த நகைக்கடன் ரூ .304 கோடி உயர்ந்து கடந்த 31.03.2023 தேதியன்று ரூ.3,164 கோடியாக அதிகரித்துள்ளது.

சென்ற 2021-22ல் ரூ.93.27 கோடியில் இருந்த நிகர லாபம் 2022-23 ரூ.8.57 கோடி அதிகரித்து பங்குதாரர்களின் ஒத்துழைப்போடு கோடியாக உயர்ந்துள்ளது மகிழ்ச்சிக்குரியதாகும்.

சென்ற ரூ.357.61 கோடியில் இருந்த மொத்த காப்பு பண இருப்பு ரிசர்வ் ஃபண்ட் 2022 -23ல் மிக உன்னிப்பாக வரவு செலவு வளர்ச்சி விகிதங்களை கவனித்ததால் இந்த ஆண்டு ரூ.58.76 கோடி காப்பு பணம் உயர்த்தப்பட்டு மொத்த காப்பு அதிகரித்துள்ளது. பண இருப்பு ரூ416,37 கோடியாக கடந்த ஆண்டைப்போலவே இந்த ஆண்டும் பங்குதாரர்களுக்கு அதிக பட்ச பங்கு ஈவு தொகை 25 சதவிகிதம் வழங்கப்படவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்து கொள்கிறோம்.

பங்கு லாப டிவிடெண்ட் தொகை பங்குதாரர்களுக்கு எந்தவிதத்திலும் தாமதமின்றி வெகு விரைவாக சென்றடைய, அதிலும் சேமிப்பு கணக்கில் வரவு வைக்க நிலையாணை (Standing Instruction) கொடுத்தவர்களுக்கும், வங்கி கணக்குகளில் வரவு வைக்கக் கோரியுள்ளவர்களுக்கும் ECS (Electronic Clearing System) மூலம் உடனடியாக டிவிடெண்ட் தொகையை வரவு வைக்க அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது என்பதை மட்டற்ற மகிழ்ச்சியோடு தெரிவித்து கொள்கிறோம்.

பொது மேலாளர் தொடங்கி, கடைநிலை ஊழியர்கள் மற்றும் நகை மதிப்பீட்டாளர் உள்பட மொத்தம் சுமார் 1,000 ஊழியர்கள் பணிபுரிகின்றனர். நிதியின் ஊழியர்களுக்கு கடந்த 2022-23 ஆண்டிற்காக போனஸ் கருணைத்தொகையாக 75 சதவிகிதம் அதாவது சுமார் ரூ.24.12 கோடி வழங்கப்பட்டுள்ளது.

ஊழியர்களுக்கு ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வந்த பொங்கல் பரிசு தொகை ரூ.1,000/ஐ கடந்த ஆண்டு முதல் ரூ2,000/ ஆகவும் மற்றும் ஊழியர் அவரவர் பணிபுரிந்த வருட கணக்கீட்டின்படி வருடம் ஒன்றுக்கு ரூ.100/ வி வழங்கப்பட்டு வந்த தீபாவளி பரிசு தொகையை ஆண்டு ஒன்றுக்கு ரூ.20 ஆக உயர்த்தியும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் நிதியின் நகை மதிப்பீட்டாளர் தூய்மை பணியாளர்கள் மற்றும் பாதுகாவலர்கள் ஆகியோருக்கும் தீபாவளி தொகை கடந்த வருடங்களை காட்டிலும் அதிகமாக உயர்த்தி வழங்கப்பட்டுள் மகிழ்ச்சிக்குரியதாகும்.

நிதியின் கிளைகளின் வணிக செயல்பாடுகளை கண்காணிக்க பட்டயக் கணக்கர்களை தணிக்கையாளர்களாக நியமித்து தணிக்கைப்பணி நடைபெறுகிறது. குறிப்பிட்ட கால இடைவெளிகளில் மேற்படி தணிக்கையாளர்கள் கிளைகளுக்கு நேரில் சென்று சட்ட திட்டங்களை முறையாக பின்பற்றி வரவு செலவு செய்யப்படுகிறதா என்பதை மிக கவனத்துடன் கண்காணிப்பதுடன், வணிக வளர்ச்சிக்குரிய ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றனர்.

எந்த நிறுவனத்திலும் இல்லாத அளவில் வாடிக்கையாளர்கள் சேவையையே பிரதானமாக கொண்டு செயல்படும் தொன்மையான நிறுவனம் நம் KMBP. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுக்கு இணையாக மக்களுக்கு சேவை செய்வது : குறைந்த வட்டியில் நகைக்கடன் வழங்குதல் ; மக்கள் நன்மதிப்புடன் வைப்பு நிதி சேகரித்தல் ; வாடகையின்றி பாதுகாப்பு பெட்டக வசதி போன்றவை இந்த நிறுவனத்தின் சிறப்பம்சங்களாகும்.

நமது நிதியில் செலுத்தப்படும் வைப்புத்தொகை அனைத்தும் மிகவும் பாதுகாப்பான வகையில் நகைக் கடன் வழங்குவதற்காக மட்டுமே பயன்படுத்தும் நிலையில் அனைத்து முதலீடுகளுக்கும் முழு பாதுகாப்பு உண்டு.

தற்போது தமிழகமெங்கும் 119 கிளைகளுடன் சிறப்பாக செயல்பட்டு வரும் நமது நிறுவனத்தின் புதிய கிளைகளை விரைவில் பல இடங்களில் திறப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

கம்பெனிகள் சமுதாய பொறுப்பு (Corporate Social Responsibility) திட்டத்தின் கீழ் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் இந்த நிறுவனம் மக்கள் நலன் சார்ந்த பல திட்டங்களுக்கும், கல்வி மேம்பாட்டிற்கும், சுத்தமான குடிநீர் வழங்குவதற்கும், மருத்துவம் சார்ந்த பல நலத்திட்டங்களுக்கும் இந்த ஆண்டு முழு தொகைகளையும் வழங்கி செலவு செய்து உதவி புரிந்து வருகிறது.

இந்த நிறுவனம் தமிழகத்தில் மேலும் பல புதிய கிளைகளை திறஉள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இந்த நிறுவனத்திற்கு அனைத்து வகையிலும் உதவிடும் வாடிக்கையாளர்கள், பங்குதாரர்கள், வங்கியாளர்கள், அரசுத்துறை அலுவலர்கள் மற்றும் பொது மக்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களை நன்றியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். அர்ப்பணிப்பு உணர்வோடு சிறப்பாக செயல்பட்டு நிதியின் வளர்ச்சியில் தங்களை முழுமையாக ஈடுபடுத்தி கொண்ட நிதியின் ஊழியர்கள் அனைவருக்கும் பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

எல்லாவற்றிற்கும் மேலாக நிதியின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்கு பேராதரவு தந்து உதவும் நிதியின் மதிப்பு மிக்க பங்குதாரர்களாகிய உங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்து இனி வரும் காலங்களிலும் தொடர்ந்து ஒத்துழைப்பு நல்குமாறு உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறோம்.

பேரவைக்கூட்டத்தில் குரு பிரசாந்த் மற்றும்.அம்பிகா ஆகியோர் நிதியின் இயக்குநர்களாக பங்குதாரர்களால் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மேலும் பங்குதாரர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்ட சிறப்பு தீர்மானத்தின்படி நிதியின் பதிவு அலுவலகம் 23 & 24, டாக்டர் பெசன்ட் ரோடு, கும்பகோணம் என்ற முகவரியில் புதிய பொலிவுடன் கட்டப்பட்டுள்ள கட்டிடத்திற்கு விரைவில் இடமாற்றம் செய்யப்படவுள்ளது.

கூட்ட நிறைவில் நிதியின் மேலாண் இயக்குநர் பி.ஆர்.பி.வேலப்பன் நன்றி கூறினார்.

கோவை ஈஸ்வரி ராதாகிருஷ்ணன் மறைவு!

கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, அக்.04-

பொது வாழ்க்கையில் பெண்கள் அதிகமாக பங்கேற்க தயங்கிய காலகட்டங்களிலேயே, கோவை நகர தி.மு.கழகத்தில் மகளிர் அணியில் தலைமைக்கழகம் அறிவிக்கும் எந்த போராட்டமானாலும், ஆர்ப்பாட்டமானாலும், மாநில மாநாடுகளானாலும், தெருமுனைக் கூட்டமானாலும், சிறை நிரப்பும் போராட்டம் என்றாலும், அஞ்சாமல் துணிந்து வந்து கலந்து கொண்டு, தங்களின் பங்களிப்பை வழங்கியவர்களில் முதன்மையானவர்கள் மொழிப்போர் தியாகி அம்மையார்_மு.இராசம் மாள், கோமதி ராமைய்யா, ஈஸ்வரி இராதா கிருஷ்ணன் ஆகிய மூவர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இவர்கள் தங்கள் குடும்பம், கணவர், பிள்ளைகள் என அனைத்தையும் மறந்து பெரியார், அண்ணா, கலைஞர், பேராசிரியர், தி.மு.கழகம் எனும் மாபெரும் தலைவர்களின்பால் அன்பும், அர்ப்பணிப்பு உணர்வும் கொண்டு, மிசாகொடுமை களை அனுபவித்து, சிறைப்பறவைகளாக கழகத்தின் வளர்ச்சிக்கு அரும்பாடு பட்டு உழைத்து வளர்த்த தளகர்த்தர்கள். அம்மூவரில் மிச்சமிருந்த ஈஸ்வரி இராதா கிருஷ்ணன் அவர்கள் இயற்கையெய்திவிட்டார்கள்.

தலைவர் கலைஞர் அவர்களை கடந்த 30.6.2001 அன்று நள்ளிரவில், போலீஸ் மூலம் அத்து மீறிச்சென்று கைது செய்ததை கண்டித்து சென்னையில் நடைபெற்ற கண்டன ஊர்வலத்தில், மெரினா கடற்கரையில் ரவுடிகளை வைத்து, கொலை வெறித் தாக்குதலை, அன்றைய ஆளுங் கட்சியான அ.தி.மு.க. வினால் கட்டவிழ்த்துவிட்டு, ஊர்வலத்தில் கலந்து கொண்ட அப்பாவித் தொண்டர்களை ஓடஓட விரட்டிச் சென்று வெட்டிச் சாய்த்த கொடூர சம்பவத்தின்போது,.

அந்தக் கொலைவெறித் தாக்குதலில் சிக்குண்டு, தாக்குதலுக்குண்டான, மொழிப்போர் தியாகி. மு.இராசம்மாள் அவர்களுடன் ஈஸ்வரி இராதா கிருஷ்ணன் அவர்களும் தாக்கப்பட்டாலும், அம்மையார் மு.இராசம்மாள் அவர்களை காப்பாற்றி, சென்னை அரசு மருத்துவமனையில் அனுமதித்து, அவர் நலம்பெற்று வீடு திரும்பும்வரை உடனிருந்து பணிவிடைசெய்து காப்பாற்றியவர் ஈஸ்வரிஇராதா கிருஷ்ணன் அவர்கள்.

ஈஸ்வரிஇராதாகிருஷ்ணன் அவர்களின் தியாகத்திற்கு ஈடுஇணை இல்லை. என்பது குறிப்பிடத்தக்கதாகும்

கழக நெசவாளரணி மாநில நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் ஈரோடு தெற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் கழக நெசவாளரணி செயலாளர் எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம் தலைமையில் கழக நெசவாளரணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமை தொகை வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்தும், வருகிற நாடாளுமன்றத் தேர்தலில் களபணிகள் ஆற்றுவது குறித்தும், சேலத்தில் நடைபெறும் இளைஞர் அணி மாநாட்டில் பங்கேற்பது குறித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் நாகலிங்கம், மணிமாறன், சிந்து ரவிச்சந்திரன், பரணி மணி, அன்பழகன், பழனிச்சாமி, ஜெயகுமார், ராமசாமி, தலைமைக் கழக பேச்சாளர் ஈரோடு இளையகோபால் மாவட்ட அமைப்பாளர்கள் எஸ்.எஸ்.எஸ்.சண்முகம், பவானி கே.சரவணன், ராஜேந்திரன், சூரம்பட்டி லோகநாதன், ஆர்.பி.பாலு, சந்திரன் உள்ளிட்ட நெசவாளரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.